செ. கு. எண்:025 நாள் :19.01.2014

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 19.1.2014

திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், அம்பத்தூர் தொழிற்பேட்டை அருகே 26.12.2013 அன்று மிதிவண்டியில் சென்று கொண்டிருந்த அம்பத்தூர், மங்களபுரம் பகுதியைச் சேர்ந்த திரு. சுதர்சனன் என்பவர் அரசுப் பேருந்து மோதியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், நரசிங்கம்பட்டி கிராமம், வெள்ளரிபட்டி என்ற பகுதி அருகே 27.12.2013 அன்று அரசுப் பேருந்து எதிரே வந்த வாகனம் மீது மோதியதில் அரசுப் பேருந்தில் பயணம் செய்த அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், உடையவர் தீயனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. செல்லமணி என்பவரின் மகள் ரஞ்சிதா உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்துகளில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9